1975 ஏப்ரல் 7] [மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்]

மற்ற மாவட்டங்களுக்குப் பரப்பப்பட்டு வருகிறது. அங்கு மேற்கொண்டு உதவி தேவையா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அங்கு வங்கிக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: ஏழிலைக் கிழங்குக்கு 10 மாதம் தண்ணீர் பாய்ச்சும் நிலைமை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இதைப் பயிரிட வேண்டுமென்று வற்புறுத்துவது இந்த டிரவுட் கண்டிஷனில் சரியான முறை என்று சொல்ல முடியாது. இந்த மாதிரி நிலைமைகளை உத்தேசித்து 3 மாதம் 4 மாதம் குறுகிய காலப் பயிர்களைப் பயிரிட வழிவகை செய்து ஏழிலைக் கிழங்கு கட்டாயமாகப் பயிரிட வேண்டுமென்பது தேவையில்லை என்று கூற பரிசிலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஏழிலைக் கிழங்கு என்பதும், வள்ளிக் கிழங்கு என்பதும், ஜவ்வரிசிக் கிழங்கு என்பதும், குச்சிக் கிழங்கு என்பதும் ஒரே கிழங்குதான். பத்து மாதங்கள் என்று சொல்லுவது முன்னால் இருந்த நிலைமை. ஆனால் தற்போது ஆராய்ச்சி மூலமாகக் கண்டு பிடிக்கப்பட்ட கிழங்கு எச். 165 என்பதெல்லாம் 8 மாதத்திலேயே வெட்டியாக வேண்டும். தண்ணீர் அதிகமாகக் கொள்ளுகிறது என்பதும் தவறு. எட்டு மாதப் பயிராக இருந்தாலும் இரண்டு மாதம் அல்லது 2½ மாதம் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல், மழையே பெய்யாமல் இருந்தாலும் இது வளரும். It is a drought resistant plant. இது பிரேசிலில் இருந்து கொண்டு வரப்பட்டு சிறப்பாக விளைச்சல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 15 டன் அல்லது 20 டன் கிடைக்கிறது. இரட்டைச் செடிகளை ஒன்றாக வைத்தால் ஒரு ஏக்கருக்கு 30 டன் என்ற அளவுக்குத் தாராளமாக விளைவதால்தான் இதைப் பயிரிடலாம் என்று கூறப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கிள்ளியூர் பகுதியில் பாக்கேஜ் திட்டம் உருவாகி இருந்தது. அந்தத் திட்டத்தினால் முழு அளவு மக்கள் பயன்பெறவில்லை. அதிகாரிகள் தவறு செய்த காரணத்தால் நிறுத்தப்பட்டது. இப்போது பட்டணங்காலில் இருந்து போதிய அளவு நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. பல்வேறு பகுதியில் தாராளமாக கழிவு பூமி இருக்கும் பகுதியில் இதைப் பயிரிட சிறப்புத் திட்டம் மறுமுறை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1975 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கன்னியாகுமரி மாவட்டத்தில் பட்டணங்கால் தண்ணீர் வந்துதான் பயிர் விளைய வேண்டுமென்பதில்லை. மழை பெய்தாலே விளைந்து விட முடியும். கேரளாவிலும் இதற்கு எங்கும் தண்ணீர் பாய்ச்சுவது இல்லை. அதே போல் கன்னியாகுமரி மாவட்டத்திலும் அதிகமாக விளைவிக்க ஏதாவது செய்ய முடியுமா என்று ஆராய்ந்து பார்த்து, செய்ய முடியும் என்றால் அதற்கான வழிவகைகளை மேற்கொள்ளலாம்.

திரு. கோவை செழியன்: மர வள்ளிக் கிழங்கில் பர்மா வெரைட்டி என்று இருக்கிறது. குறுகிய காலத்தில் பயிராகக் கூடியது. அந்த கட்டிங்ஸ் கோவை மாவட்டத்தில் கிடைப்பதில்லை. அதைக் கொடுக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்யும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: பர்மா வெரைட்டி குறுகிய காலத்தில் விளைந்து விடுகிறது என்பது அவ்வளவு சரியானது அல்ல. பர்மா வெரைட்டி சேலம் மாவட்டத்தில் பெருவாரியாக இரண்டு லட்சம் ஏக்கரில் போட்டு அவ்வளவும் 'மொசேக்' என்ற நோயால் தாக்கப்பட்டு ஏக்கருக்கு நாலைந்து டன் விளைச்சல் கூட வராத நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆகவே, புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எம். 4. திருவனந்தபுரம் எச். 165 என்ற விதைகளைப் பரப்பிக் கொண்டு வருகிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: இந்தப் பயிருக்கு இரண்டரை மாதம் தண்ணீரே இல்லை என்றாலும் வரும் என்று சொன்னார்கள். அதை நம்பி கோவை மாவட்ட விவசாய மக்கள் நிச்சயமாகப் போடுவார்கள். கிணறு வற்றித் தண்ணீர் இல்லாமல் போனால் இந்தப் பயிர் வராவிட்டால் அதற்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாம் கேள்வியா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இரண்டொரு மாதம் தண்ணீர் வசதி இல்லாமல், மழையும் இல்லாமல் இருந்தாலும் இந்தக் கிழங்கு செடி பச்சையாக இருக்க என்ன காரணம் என்றால், இந்தக் கிழங்கு வேரில் உற்பத்தியாகிறது. இதற்கு ஆணி வேர் கிடையாது. எப்படி ஒட்டகமானது பாலைவனத்தில் போகும்போது தன்னுடைய முதுகில் உள்ள சத்தை எடுத்துக் கொள்ளுகிறதோ

[1975 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு இந்தக் கிழங்கு உணவாக கன்னியாகுமரி, சேலம் மாவட்டங்களிலிருந்து வந்து விற்பனையாகிறது. இராமநாதபுரத்தில் உடனடியாக இதைப் போட வேண்டுமென்று சொல்லவில்லை. இராமநாதபுரத்தில் பயிரிடுவது பொருத்தமானது என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. இப்போது இராமநாதபுரத்தில் வற்புறுத்தவில்லை.

மரவள்ளிக்கிழங்கிலிருந்து அரிசி

*570 வினா—**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மரவள்ளிக்கிழங்கிலிருந்து (Tapioca) அரிசி (Synthetic Rice) தயாரிக்கும் ஆலையொன்று நிறுவப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. பொன்னுமலை: தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் தான் மரவள்ளிக்கிழங்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. லட்சக்கணக்கான ஏக்கர்களில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. அங்கு ஒரு க்ளுக்கோஸ் தொழிற்சாலை ஏற்படுத்தப்படப் போவதாக பேச்சு இருந்தது. அது எந்த நிலையில் இப்போது உள்ளது? அதை ஏற்படுத்த உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சேலம் மாவட்டத்தில் கூட முன்பு போல் ஜவ்வரிசி உற்பத்தி செய்யாமல் அந்தக் கிழங்கை ரவையாக மாற்றுவதற்கு உண்டான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: சில மாதங்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் இங்கு ஒரு அரிசி தயாரிக்கப்படுகிறது என்று பரிசோதனை முறையில் உள்ள அரிசியை என்னிடம் காண்பித்தார்கள். அது இப்போது அவசியமாகவும் இருக்கிறது. ஆகவே அந்த அரிசியைத் தயாரிக்க ஏற்பாடு செய்வார்களா?

1975 ஏப்ரல் 7] [திரு. வி. கே. இராஜாப் பிள்ளை]

அதைப் போல் குச்சிக் கிழங்கு அல்லது மர வள்ளிக் கிழங்கு செடிக்கு ஒரு சக்தி என்னவென்றால் அது கிழங்கில் இருந்து ஆகாரத்தை எடுத்துக் கொண்டு பச்சையாக இருக்கும்.

திரு. மு. இரத்தினசபாபதி : நெல்லை மாவட்டத்தில் சீனிக் கிழங்கு—சர்க்கரை வள்ளிக் கிழங்கு குறுகிய காலப் பயிராக, தோட்டப் பயிராக விவசாயம் செய்யப்படுகிறது. அதற்கு ஏன் விவசாயத் துறையிலிருந்து அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவி செய்யவில்லை. அதைத் தீவிரப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வினா ஏழிலைக் கிழங்கு அல்லது குச்சிக் கிழங்கு அல்லது மரவள்ளிக் கிழங்கைப் பற்றியது. இது டாபியோகா. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது சீனிக் கிழங்கு—ஸ்வீட் பொட்டாட்டோ. அது வேறு. அது கொடியாக வளரும். அதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் தகவல் சொல்லலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மரவள்ளிக் கிழங்கு பயிரிட மிகவும் பொருத்தமானது கன்னியாகுமரி ஜில்லா. அங்கு ரப்பர் பிளாண்டேஷன் செய்யும் இடத்தில் இந்த மர வள்ளிக் கிழங்கையும் பயிரிட்டால் ஒரு மடங்கு அதிகமாகக் கிடைக்கும். அதற்காக மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் வன இலாகா அமைச்சர் அவர்களுடன் கலந்து அதை நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மர வள்ளிக் கிழங்கை ஊடு பயிராகப் போடுவது அவ்வளவு சரியானது அல்ல. இதற்கு ஆணி வேர் இல்லாமல் பகுதி வேராக பக்கத்தில் மூன்று அடி நான்கு அடி விரிந்து கொண்டு போகும் காரணத்தால் ஊடு பயிருக்குத் தகுதியான பயிர் அல்ல இது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : சமீபத்திய கண்டுபிடிப்பின் பிரகாரம் இது எட்டு மாதப் பயிராக இருந்தாலும் வறட்சியால் கஷ்டப்படக்கூடிய இராமநாதபுரத்தில் இந்த நேரத்தில் குறுகிய காலப் பயிரை வைத்தால்தான் விவசாய மக்கள் பலன் பெற முடியுமே தவிர, இதனால் பயன் பெற முடியாது. இது நல்ல திட்டமாக இருந்தாலும் வறட்சி காரணமாக தற்காலிகமாக இதை வைக்க வேண்டுமென்று வற்புறுத்தாமல் மழை பெய்யும்போது வைக்கலாம் என்று சொல்லும் அளவுக்கு சர்க்கார் உத்தரவிடுமா?

1975 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த மரவள்ளிக் கிழங்கிலிருந்து அரிசி தயார் செய்ய முன்கூட்டியே இயந்திரம் ஒன்றை நிறுவி சோதனை பார்க்க மைசூரில் உள்ள புட் டெக்னாலஜிகல் அன்ட் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், சோதனைக் கூடத்தோடு தொடர்பு கொண்டுள்ளோம்.

திரு. என். மருதாசலம்: மரவள்ளிக்கிழங்கில் இருந்து சேமியா செய்யப்படுகிறது. இப்போது நமக்கு உணவு தானியங்கள் மிக அத்தியாவசியமாக இருக்கிறது. ஆகவே அந்த சேமியாக் கம்பெனிகளை அதிகப்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஜவ்வரிசி அல்லது சேமியா, இவற்றை தற்போது அரசாங்கம் உற்பத்தி செய்யவில்லை. தனியார் தொழிற்சாலைகளில்தான் ஜவ்வரிசி அல்லது சேமியா உற்பத்தி செய்கிறார்கள். பொதுவாக அதிலிருந்து சுஜி அல்லது ரவை உற்பத்தி செய்கிறார்கள். சென்னையில் ஏராளமாக அந்த ரவை விற்பனையாகிறது. கேரளாவிலிருந்து இங்கு சென்னைக்கு வந்து கடை வைத்து இந்தக் கிழங்கில் இருந்து தயார் செய்யப்பட்ட ரவையை விற்று, பெருவாரியான ஹோட்டல்களில் ரவை மூலம் செய்கிற பலகாரங்களுக்கு இந்த ரவையைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

சிறு உழவர்கள் வளர்ச்சித் திட்டம்

*571 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள சிறு விவசாயிகளின் அபிவிருத்திக்கென தனித்திட்டம் எதையேனும் அரசு தயாரித்து வருகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) ஐந்து ஆண்டுகளில் 150 லட்சம் ரூபாய் மூலதனச் செலவு செய்யவும் 876 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கவும் திட்ட மிடப்பட்டிருக்கிறது.